செ.வெ.எண் : 50 /ஜூன் நாள் : 23.06.2017

## இராமநாதபுரம் மாவட்டம்

## பரமக்குடி மற்றும் கீழக்கரையில் செயல்பட்டு வரும் அம்மா மருந்தகங்களில் இதுவரை 13,244 பயனாளிகள் ரூ.223 இலட்சம் மதிப்பில் தரமான மருந்துகளை பெற்று பயனடைந்துள்ளனர்

## மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்

இராமநாதபுரம் மாவட்டத்தில் செயல்பட்டு வரும் அம்மா மருந்தகங்கள் தொடங்கப்பட்டு, இதுநாள் வரையில் 13,244 பயனாளிகள் ரூ.223 இலட்சம் மதிப்பில் தரமான மருந்துகளை பெற்று பயனடைந்துள்ளனர் என மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

இது குறித்து மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்துள்ளதாவது:

தமிழகத்தில் மருந்து விற்பனையில் வெளிச்சந்தையில் உள்ள விலை உயர்வை கட்டுப்படுத்தவும் மருந்து உபயோகிப்பாளர்களுக்கு குறைந்த விலையில் மருந்து விநியோகம் செய்திடும் நோக்கத்துடன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் அம்மா மருந்தகங்கள் தொடக்கி வைக்கப்பட்டது. இராமநாதபுரம் மாவட்டத்தில் பரமக்குடி மற்றும் கீழக்கரை ஆகிய இரண்டு இடங்களில் அம்மா மருந்தகங்கள் செயல்பட்டு வருகின்றன.

இராமநாதபுரம் மாவட்டத்தில், அம்மா மருந்தகம் தொடங்கப்பட்ட நாள் முதல் இதுவரை ரூ.223 இலட்சம் மதிப்பில் 13,244 பயனாளிகள் குறைந்த விலையில் தரமான மருந்துகளை பெற்று பயனடைந்துள்ளனர். நாள்தோறும் சராசரியாக 350 வாடிக்கையாளர்கள் வருகை தந்து அம்மா மருந்தகத்தை பயன்படுத்துகின்றார்கள்.

மேலும் வாடிக்கையாளரின் வசதிக்காக அவர்களுக்கு தேவைப்படும் மருந்துகளை அவர்களது வீட்டு முகவரிக்கே நேரடியாக (Door Delivery) கொண்டு சென்று சிறப்பான சேவை செய்து வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும் அம்மா மருந்தகத்தில் விற்பனை செய்யப்படும் மருந்துகள் அனைத்தும் அதிகபட்ச கூடுதல் விலையில் இருந்து 15 சதவீதம் குறைத்து விற்பனை செய்யப்படுகிறது. அதே போன்று சர்ஜிகல் இனங்களுக்கு அதிகபட்ச கூடுதல் விலையில் 20 சதவீதம் முதல் 25 சதவீதம் வரையிலும் குறைந்து விற்பனை செய்யப்படுகிறது. குறிப்பாக சில உயிர்காக்கும் மருந்துகளுக்கு அதிகபட்சமாக 35 சதவீதம் வரையிலும் தள்ளுபடி செய்து விற்பனை செய்யப்படுகிறது என்பது கூடுதல் சிறப்பாகும். மேலும் வளரும் குழந்தைகளின் நலனை கருத்தில் கொண்டு சத்து மிகுந்த உணவுப் பொருட்களுக்கு அனைத்தும் அதிகபட்ச கூடுதல் விலையில் 5 சதவீதம் முதல் 6 சதவீதம் வரை தள்ளுபடி செய்து விற்பனை செய்யப்படுகிறது.

வார நாட்கள் முழுவதும் விடுமுறையின்றி காலை 9.00 மணி முதல் இரவு 9.00 மணி வரையிலும் வாடிக்கையாளர்களின் சேவைக்காக அம்மா மருந்தகம் செயல்பட்டு வருகிறது. இதற்காக தனியாக பணியாளர்கள் நியமனம் செய்யப்பட்டு கூட்டுறவுத்துறை அலுவலர்கள் தொடர்ந்து கண்காணித்து வருகிறார்கள்.

எனவே, இத்தகைய சிறப்பு வாய்ந்த அம்மா மருந்தகங்களை பொதுமக்கள் முழுமையாக பயன்படுத்திக் கொண்டு, தங்களுக்கு தேவையான மருந்துகளை மிகக் குறைந்த விலையில் பெற்று பயனடையலாம் என மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**